Answer Key – Test 14 (3. UNIT 9 – 200 QUESTIONS)

**1)** போலியோ நோயை அறவே ஒழிக்க தமிழகத்தில் போலியோ சொட்டுமருந்து முகாம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு என்ன?

**A) 1995** B) 1996 C) 1997 D) 2000

**2)** மாணவர்களிடையே அறிவியல் அறிவை வளர்த்துவரும், பிர்லா கோளரங்கம் எங்கு அமைந்துள்ளது?

**A) சென்னை** B) காஞ்சிபுரம் C) திருவள்ளூர் D) வேலூர்

**3)** இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழகத்தில் பொதுநூலகச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு என்ன?

**A) 1948** B) 1949 C) 1950 D) 1952

**4)** உலகின் நீட்டித்த நிலைத்த வளர்ச்சிக்காக, ஐக்கிய நாடுகள் சபையால் எத்தனை இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன?

A) 19 இலக்குகள், 167 குறிக்கோள்கள்
**B) 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள்**
C) 17 இலக்குகள், 167 குறிக்கோள்கள்
D) 19 இலக்குகள், 169 குறிக்கோள்கள்

**5)** தமிழகத்தின் தற்போதைய மனிதவளக் குறியீடு என்ன?

**A) 0.708** B) 0.608 C) 0.721 D) 0.621

**6)** இராஜகோபாலாச்சாரியின் இந்தி திணிப்பு அறிவிப்பை எதிர்த்து, மறைமலையடிகள், பாரதிதாசன், கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோர் 1937இல் முதன்முறையாக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை எங்கு நடத்தினர்?

A) நன்னிலம் B) செங்கல்பட்டு C) சேலம் **D) திருச்சி**

**7)** தாழ்த்தப்பட்ட மானவர்களுக்கென நீதிக்கட்சி ஆட்சியில், தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1921 **B) 1923** C) 1925 D) 1931

**8)** பாண்டியர்களின் காலத்தில் கல்விநிலையங்கள் பின்வரும் எப்பெயரில் அழைக்கப்படவில்லை?

A) கடிகை B) சாலை C) வித்யாசாதனம் **D) விஜயாசாதனம்**

**9)** தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்டதால் வி.கோ. சூரிய நாராயணசாஸ்திரி தமது பெயரை எவ்வாறு மாற்றிக்கொண்டார்?

A) சுந்தரனார்
B) மறைமலை அடிகளார்
**C) பரிதிமாற் கலைஞர்**
D) தெவநேயப் பாவாணர்

**10)** தமிழகத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கழகம் அமைக்கப்பட்டுள்ள இடம் எது?

A) சந்திரகிரி
B) சங்ககிரி
**C) மகேந்திரகிரி**
D) வெள்ளியங்கிரி

ETW ACADEMY

**11)** தமிழகத்தில் காணப்படும் முக்கிய தாதுக்கள் மற்றும் பகுதிகள் இணைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் தவறான இணை எது?

A) நெய்வேலி - மிகப்பெரிய பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது.

**B) ~~இராமநாதபுரம் - இரும்புத்தாது படிமங்கள் காணப்படுகின்றன.~~**

C) காவிரி வடிநிலப் பகுதி - எண்ணெய் மற்றும் இயற்கைவாயு படிவுகள் காணப்படுகிறன.

D) ஏதுமில்லை

**இரும்புத்தாது படிமங்கள்** - சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும்

**12)** தமிழகத்தில் சிமெண்ட் உற்பத்தி ஆலைகள் இயங்கும் இடங்கள்?

**A) அரியலூர் & ஆலங்குளம்**

B) கிருஷ்ணகிரி & ஓசூர்

C) மணப்பாறை & விராலிமலை

D) பெரம்பலூர் & சேத்தியாதோப்பு

**13)** பொருந்தாதது எது?

**A) ~~வரதட்சணை தடுப்பு சட்டம் - 1960~~**

B) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் - 2005

C) பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் சட்டம் - 2013

D) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் விதிகள் - 2006

- **வரதட்சணை தடுப்பு சட்டம் - 1961**

**14)** பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. வறுமை ஒழிப்பு செயல்பாடுகளில் மற்ற மாநிலங்களை விட, தமிழ்நாடு சிறப்பாக உள்ளது
2. தமிழ்நாட்டில் ஏழை மக்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களை விட மிகக் குறைவாக உள்ளது

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி **C) இரண்டும் சரி** D) இரண்டும் தவறு

**15)** இந்திய அளவில், டிஜிட்டல் மயமாக்கத்தில் தமிழகம் வகிக்கும் நிலை என்ன?

**A) முதலிடம்** B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**16)** 2019இல் நதி மீட்டெடுத்தல் பணிக்காக மூன்றாவது பரிசு பெற்ற மாவட்டம் எது?

**A) திருநெல்வேலி** B) தஞ்சாவூர் C) சிவகங்கை D) திருவாரூர்

**17)** தமிழ்நாட்டில் குடியிருப்போரின் தரவுகளின் ஒற்றை ஆதாரமாக விளங்கும் தளம் எது?

**A) மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம் (SFDB)**

B) குடியிருப்போரின் குடும்பத் தரவுத் தளம் (SFDB)

C) மாநிலத்தில் குடியிருப்போரின் தரவுத்தளம் (SFDB)

D) குடியிருப்போரின் குடும்பத் தளம் (SFDB)

ETW ACADEMY

**18)** 1921இல் பின்வரும் தீர்மானங்களை கொண்டுவந்த சட்டமன்ற உறுப்பினர் யார்?

1. "எல்லா அரசு பணிகளிலும் பிராமணரல்லாதவர்களை அவர்களுக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி இருந்தாலே போதும் என்று கருதி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்.

2. கிறிஸ்தவர்கள், முகமதியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என அனைவரும் அரசுப்பணிகளில் அமர்த்தப் படவேண்டும். இதற்கான ஒரு நிலையான ஆணை வெளியிட வேண்டும்.

3. நூறுரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் உத்தியோகமாக இருந்தால் 75% அளவு மக்களை அது அடையும்வரை ஏழாண்டுகாலம் வரை அமலில் இருக்கும் வண்ணமும் இவ்வாணை அமலில் இருக்க வேண்டும்"

A) A. சுப்பராயன் B) காத்தவராயன் C) பனகல் அரசர் **D) முனுசாமி**

**19)** தேயிலை பயிரிடப்படும் பரப்பின் அடிப்படையில், தமிழகம் எவ்விடத்தில் உள்ளது?

A) முதலிடம் **B) இரண்டாமிடம்** C) மூன்றாமிடம் D) ஐந்தாமிடம்

**20)** நிதி ஆயோக் இன் 2020 21 அறிக்கையின்படி, வறுமை இல்லாத மாநிலங்களின் பட்டியலில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

A) கேரளா B) மகாராஷ்டிரா C) உத்திரப் பிரதேசம் **D) தமிழ்நாடு**

**21)** தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமானது எது?

A) மேற்தட்டு மக்களுக்கான சமூக நலக் கொள்கைகள்

B) குறிப்பிட்ட மக்களுக்கான சமூக நலக் கொள்கைகள்

**C) பெரும்பாலான மக்களுக்கான சமூக நலக் கொள்கைகள்**

D) ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நலக் கொள்கைகள்

**22)** தமிழ்நாடு மின்னாளுமை ஆணையரகத்தின் உச்ச நிலையில் உள்ளவர் யார்?

**A) மின் ஆளுமை ஆணையர்** B) மின் ஆளுமை இணை இயக்குனர்

C) நிர்வாக கணக்கு அலுவலர் D) துணை நிர்வாக இயக்குனர்

**23)** சென்னை மாகாண அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நிதி உதவித்திட்டங்களை அறிவித்தது எப்போது?

A) 1870 B) 1875 C) 1880 **D) 1885**

**24)** தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) எங்கு அமைந்துள்ளது?

**A) கரூர்** B) ஈரோடு C) சேலம் D) நாமக்கல்

**25)** 2019- 20 ஆம் கல்வி ஆண்டில் மொத்த உயர் கல்வி சேர்க்கை விகிதத்தின் அடிப்படையில் இந்திய அளவில் தமிழகம் வகிக்கும் இடம் என்ன? (மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் என அனைத்தையும் கருத்தில் கொள்க)

A) முதலிடம் B) இரண்டாமிடம்

**C) மூன்றாமிடம்** D) நான்காம் இடம்

- முதலிடம் திரிபுரா இரண்டாமிடம் சண்டிகர்

ETW ACADEMY

**26)** திட்டங்கள் மற்றும் ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தவறான இணை எது?

A) முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம் - 1989

B) பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டமியற்றல் - 1989

**C) மதுரையில் முதல் உழவர் சந்தை தொடக்கம் – ~~2000~~ ==> 1999**

D) வரும்முன் காப்போம் திட்டம் - 2006, டிசம்பர் 30

**27)** இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகள் அமைந்துள்ள மாநிலம் எது?

A) குஜராத் B) கேரளா C) மேற்கு வங்கம் **D) தமிழ்நாடு**

**28)** நெல் அதிகம் பயிரிடப்படும் மாவட்டங்களில் சேராதது எது?

**A) தர்மபுரி** B) திருவள்ளூர் C) திருநெல்வேலி D) விழுப்புரம்

**29)** தமிழ்நாட்டின் முக்கிய பட்டு நெசவு மையங்களில் சேராதது எது?

A) சேலம் B) ஆரணி **C) ஓசூர்** D) கும்பகோணம்

- முக்கிய மையங்கள்: காஞ்சிபுரம், கோவை, மதுரை & திருநெல்வேலி

**30)** நகரமயமாதலில் தமிழ்நாட்டின் சராசரி அளவு என்ன?

A) 31.5 % **B) 48.4 %** C) 38.4 % D) 41.5 %

**31)** 2016-17 நிதியாண்டில், தமிழ்நாட்டின் GDSP, வாங்கும் சக்தியின் அடிப்படையில் உலக அளவில் எந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாக இருந்தது?

**A) ஐக்கிய அரபு எமிரேட்** B) பங்களாதேஷ்

C) பாகிஸ்தான் D) குவைத்

**32)** இராஜகோபாலாச்சாரியின் இந்தி திணிப்பு அறிவிப்பை எதிர்த்து சென்னையில் யாருடைய தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றன?

A) ஏ.டி. பன்னீர் செல்வம் B) ஈழத்துச் சிவானந்த அடிகள்

C) ஈ.வெ.ரா **D) இவரனைவரின்**

**33)** இந்தியாவின் பட்டு உற்பத்தியில் தமிழகம் வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம் B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் **D) நான்காமிடம்**

**34)** இந்தியாவின் பெரிய மாநிலங்களில் 2019 20 ஆம் கல்வி ஆண்டில் மொத்த உயர் கல்வி சேர்க்கை விகிதத்தின் அடிப்படையில் தமிழகம் வகிக்கும் இடம் என்ன?

**A) முதலிடம்** B) இரண்டாமிடம் C) ஐந்தாமிடம் D) ஏழாமிடம்

**35)** அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோருக்கு இட ஒதுக்கீடு மற்றும் பிரதிநித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடைக் கோரிய அறிக்கை எது?

A) பிற்படுத்தப்பட்டோர் அறிக்கை B) ஜஸ்டிஸ் அறிக்கை

**C) பிரமணரல்லாதோர் அறிக்கை** D) ஒடுக்கப்பட்டோர் அறிக்கை

ETW ACADEMY

**36)** இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாவது B) **இரண்டாவது** C) ஒன்பதாவது D) பதிமூன்றாவது

**37)** 2016-17 நிதியாண்டில், தமிழ்நாட்டின் GDSP, உலக அளவில் எந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாக இருந்தது?

A) ஐக்கிய அரபு எமிரேட் B) பங்களாதேஷ் C) பாகிஸ்தான் D) **குவைத்**

**38)** சென்னை மகாணத்தில் ஜமீன்தாரி முறை யாருடைய ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்பட்டது?

A) **ஓமந்தூர் ராமசாமி** B) இராஜாஜி
C) பி.எஸ். குமாரசாமி ராஜா D) பக்தவச்சலம்

**39)** Transplant Authority of Tamilnadu - உடலுறுப்பு மாற்றுக்கான ஆணைக்குழு உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) **December 2014** B) December 2015 C) December 2016 D) December 2017

**40)** காஞ்சிபுரத்திலிருக்கும் எக்கோயில் சங்ககாலத்தில் பொது ஆவணக் காப்பகமாக விளங்கியது?

A) வரதராஜப் பெருமாள் ஆலயம் B) **கைலாசநாதர் ஆலயம்**
C) ஏகாம்பரநாதர் ஆலயம் D) காமாட்சியம்மன் ஆலயம்

**41)** தமிழக அரசு தமிழகத்தில் தொழிற்கல்வியை எப்போது அறிமுகப்படுத்தியது?

A) 1968 ஜீன் B) 1988 ஜூலை C) **1978 ஜூன்** D) 1958 ஜூலை

**42)** சுதந்திரத்திற்கு முன் தமிழ்நாட்டில் இருந்த பல்கலைக்கழகங்களில் சேராதது எது?

A) சென்னை பல்கலைக்கழகம் B) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
C) ஆந்திர பல்கலைக்கழகம் D) **அண்ணா பல்கலைக்கழகம்**

**43)** தமிழகத்தில், கொண்டைக்கடலை உற்பத்தியில் எம்மாவட்டம் முதலிடம் வகிக்கிறது?

A) திண்டுக்கல் B) தேனி C) மதுரை D) **கோயம்புத்தூர்**

**44)** தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்கள் யாவை?

A) **சென்னை, எண்ணூர் & தூத்துக்குடி** B) சென்னை, நாகை & தூத்துக்குடி
C) சென்னை, இராமநாதபுரம் & எண்ணூர் D) எண்ணூர், தூத்துக்குடி & இராமநாதபுரம்

**45)** மூன்றாம் பாலினருக்கான நலவாரியம் அமைத்த முதல் மாநிலமாக திகழ்வது எது?

A) குஜராத் B) **தமிழ்நாடு** C) கேரளா D) புதுச்சேரி

**46)** 2019 மனித மேம்பாட்டுக் குறியீட்டில், முதல் மூன்று இடங்களில் உள்ள நாடுகள் எவை?

A) **நார்வே, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து** B) ஜெர்மனி, ஹாங்க் காங், ஆஸ்திரேலியா
C) ஐஸ்லாந்த், ஸ்வீடன், சிங்கப்பூர் D) நைகர், மத்திய ஆப்பிரிக்க குடியரசு, சாட்

**47)** நிதி ஆயோக் இன் 2020 21 அறிக்கையின்படி, நல்ல சுகாதாரம் கொண்ட மாநிலங்களில் பட்டியலில் தமிழ்நாடு வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம் B) இரண்டாம் C) **மூன்றாமிடம்** D) நான்காம் இடம்

ETW ACADEMY

**48)** வரவு செலவு அறிக்கையின்படி, 2017-18இல் ரூபாயின் அடிப்படையில் தமிழ்நாட்டின் தலா வருமானம் எவ்வளவாக இருந்தது?

A) 1,03,600 B) 1,40,492 C) 1,76,000 **D) 1,88,492**

**49)** சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தி எதிர்ப்பு நாளாகக் கடைபிடிக்கப்பட்ட நாள் எது?

A) 1950, ஜனவரி 10 B) 1950, பிப்ரவரி 10 C) 1950, மார்ச் 10 **D) 1950, மே 10**

**50)** எம்.ஜி.ஆரால், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்ட நாள் எது?

A) 1982 - செப்டம்பர் 30 B) 1982 - செப்டம்பர் 15

**C) 1981 - செப்டம்பர் 15** D) 1982 - செப்டம்பர் 30

**51)** தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்திற்கு தனிச்சிறப்பு பாராட்டு பத்திரம் வழங்கியுள்ள அமைப்பு எது?

A) மத்திய தானிய அமைப்புகளின் முனைப்பு B) ஆசிய தானிய அமைப்புகளின் முனைப்பு

**C) தெற்காசிய தானிய அமைப்புகளின் முனைப்பு** D) ஐரோப்பிய தானிய அமைப்புகளின் முனைப்பு

**52)** இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI), தமிழ்நாட்டில் நிரந்தரப் பதிவு மையங்களாக (PECs) நியமிக்கப்பட்டுள்ளது எது?

A) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட் (TACTV)

B) தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)

**C) A & B**

D) ஏதுமில்லை

**53)** இந்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டுவரும் தெசிய மின் ஆளுமைத்திட்டத்தின் மூலம், அலைபேசி ஆளுமைக்காக தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ள செயலி?

A) EMANG **B) UMANG** C) UMANE D) UMANU

- UMANG - Unified Mobile Application for New Age - புதுயுக ஆளுகைக்கான பொது அலைபேசி செயலி

**54)** ஆனைமலைப்பகுதில் அமைந்திருப்பவைகளில் சேராதது எது?

A) ஆனைமலை புலிகள் காப்பகம்

B) ஆழியாறு பாதுகாக்கப்பட்ட காடுகள்

C) வால்பாறை மலைவாழிடம் & காடம்பாறை நீர்மின் நிலையம்

**D) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சோதனை உந்துவிசை செயற்கைக்கோள் ஏவுதளம்**

**55)** பின்வரும் எப்பிரிவில் அரசு துறைகளுக்கு விருதுகள் வழங்கப்படுவதில்லை?

A) மின் ஆளுமை மூலம் மறு கட்டமைப்பில் சிறந்து விளங்கும் அரசு துறை

B) மொபைல் / குடிமகன் மைய சேவைகளுக்கான சிறந்த மின்-ஆளுமை பயன்பாடு

C) மாவட்ட அளவிலான மின் ஆளுமைக்கான விருது

**D) மாநகராட்சி அளவிலான மின் ஆளுமைக்கான விருது**

**56)** பாலின விகிதத்தில் தமிழ்நாடு எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாவது B) இரண்டாவது **C) மூன்றாவது** D) நான்காவது

ETW ACADEMY

**57)** தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் _____ டாலர்களுடன், இந்தியாவில் உள்ள பல மாநிலங்களைக் காட்டிலும் உயர்வாக உள்ளது.

A) 1200 B) 1800 **C) 2200** D) 5500

**58)** வேளாண்மைப் பல்கலைக்கழகமும், பாரதியார் பல்கலைக்கழகமும் அமைந்துள்ள மாவட்டம் எது?

A) நீலகிரி B) மதுரை C) திண்டுக்கல் **D) கோயம்புத்தூர்**

**59)** ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் நிறுவிய அமைப்பு எது?

A) திராவிட விடுதலைக் கழகம் B) திராவிடர்க் கழகம்

**C) அத்வைதானந்தா சபா** D) திராவிட மகாஜனசபை

**60)** அ. BFSI - Banking, Financial Service and Insurance

ஆ. HSM - Health Systems Managements

இ. CAD - Computer Aided Design

ஈ. CAE - Computer Aided Engineering

மேற்கண்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளில் எதன் சிறப்பிடமாக தமிழ்நாடு உள்ளது?

A) அ மட்டும் B) அ மற்றும் ஆ மட்டும்

C) ஆ மற்றும் இ மட்டும் **D) அனைத்தும்**

**61)** தமிழக அரசின் அனைத்து மின்னாளுமை முயற்சிகளையும் தலைமையேற்று செயல்படுத்திட உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

A) மின்னாளுமை அமைச்சரகம் B) மின்னாளுமை நிதியம்

**C) மின்னாளுமை ஆணையரகம்** (TNeGA) D) மின்னாளுமை செயலகம்

**62)** தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1979 B) 1982 **C) 1989** D) 1991

**63)** செங்கம் தாலுகாவில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேக் கட்டப்பட்டுள்ள அணை எது?

A) செங்கம் அணை B) பாபநாசம் அணை

C) மணிமுத்தாறு அணை **D) சாத்தனூர் அணை**

**64)** இந்தியாவின் மொத்த வெர்மிகுலைட் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு என்ன?

**A) 75 %** B) 59 % C) 52 % D) 55.3 %

**65)** சென்னை மாகாண மக்களின் மேல் பிராமணர்களின் பண்பாட்டு ஆதிக்கமே மீண்டும் இந்தி வடிவில் வருகிறது எனக் கூறியவர் யார்?

**A) தந்தைப் பெரியார்** B) டாக்டர் நடேசனார்

C) மா.பொ.சிவஞானம் D) திரு.வி. கல்யாணசுந்தரனார்

ETW ACADEMY

**66)** அறிஞர் அண்ணாவால் 1968, ஜனவரி 3-இல் சென்னையில் நடத்தப்பட்ட மாநாடு எது?

A) முதல் உலகத் தமிழ் மாநாடு
**B) இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு**
C) மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு
D) முதலாம் செம்மொழி மாநாடு

**67)** மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் & ஆராய்ச்சியகம் (CLRI) எங்கு அமைந்துள்ளது?

A) வேலூர் B) இராணிப்பேட்டை **C) சென்னை** D) கோயம்புத்தூர்

**68)** பெண் குழந்தைகளுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?

A) 1990 **B) 1992** C) 1994 D) 2004

**69)** இந்திய அளவில், தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தமிழ்நாடு எத்தனை சதம் பங்களிப்பினை அளிக்கிறது?

A) 21 % B) 33 % **C) 17 %** D) 24 %

**70)** மனித மேம்பாட்டுக் குறியீட்டுக்கான கணக்கீடானது மனித வளர்ச்சியிக்கான முக்கிய அம்சங்களை புறக்கணித்துள்ளது என்று கூறியுள்ளவர் யார்?

A) விட்டல் சந்திரகுஹா
B) இராமச்சந்திரகுஹா
C) அபராஜிதோகுஹா
**D) பிஸ்வஜித்குஹா**

**71)** நீதிக்கட்சியால் முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

A) 1920, செப்டம்பர் 20
**B) 1921 செப்டம்பர் 16**
C) 1921 ஆகஸ்ட் 16
D) 1922 ஆகஸ்ட் 15

**72)** நீதிக்கட்சியால் "சென்னை அரசு தொழில் உதவிச் சட்டம்" இயற்றப்பட்ட ஆண்டு என்ன?

A) 1920 B) 1921 **C) 1922** D) 1924

**73)** ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என ஆணைபிறப்பித்தது எது?

A) தி.மு.க ஆட்சி B) காங்கிரஸ் ஆட்சி **C) நீதிக்கட்சி ஆட்சி** D) அ.தி.மு.க ஆட்சி

**74)** திராவிடர் கழகம், யாரைத் தளபதியாகக் கொண்டு 1948, நவம்பர் 2 அன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தொடங்கியது?

A) தந்தைப் பெரியார்
**B) சி.என். அண்ணாதுரை**
C) நாவலர் நெடுஞ்செழியன்
D) சௌந்தரராஜன்

**75)** 2006, ஜூலை 15 அன்று, யாருடையப் பிறந்தநாள் "கல்வி வளர்ச்சி நாளாகக்" கொண்டாடப்படும் என்று கலைஞர் அறிவித்தார்?

**A) காமராசர்** B) கக்கன் C) மாதவராய் D) அறிஞர் அண்ணா

**76)** இ - அடங்கலுக்கான கைபேசிச் செயலியை உருவாக்கியது எது?

A) ELCOT **B) TNeGA** C) CEET D) TACTV

ETW ACADEMY

**77)** புதிய கல்விக் கொள்கை மூலமாக உயர்கல்வி சேர்க்கையில் 2030 இல் அடையவேண்டி நிர்ணயிக்கப்பட்ட இலக்கை தமிழ்நாடு எந்த கல்வி ஆண்டிலேயே எட்டிவிட்டது எனலாம்?

**A) 2019 - 20** B) 2018 - 19 C) 2017 - 18 D) 2020 - 21

**78)** கட்டாய இந்தி திணிப்பை விலக்கி, 1940 பிப்ரவரியில், இந்தியை விருப்பபாடமாக்கியவர் யார்?

A) டி. பிரகாசம் **B) எர்ஸ்கின் பிரபு**

C) டங்கன் பிரபு D) மவுண்ட்பேட்டன் பிரபு

**79)** இந்து சமய அறநிலையத்துறை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு என்ன?

**A) 1926** B) 1928 C) 1927 D) 1929

**80)** தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ள தகைசால் தமிழர் விருதை முதன்முதலில் பெற்றவர் யார்?

**A) சங்கரைய்யா** B) தோ.பரமசிவன் C) கி.ராஜநாராயணன் D) நல்லகண்ணு

**81)** பிராமணரல்லாதோருக்கு தேர்தலில் இட ஒதுக்கீடு வழங்கிய சட்டம் எது?

A) 1909 ஆம் ஆண்டு சட்டம் **B) 1919 ஆம் ஆண்டு சட்டம்**

C) 1935 ஆம் ஆண்டு சட்டம் D) 1947 ஆம் ஆண்டு சட்டம்

**82)** மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கியவர் யார்?

A) P. சுப்ரமணியம் **B) டாக்டர். சி. நடேசனார்**

C) சரி. பிட்டி தியாகராயர் D) T.M. நாயர்

**83)** உலகிலேயே, கண் மருத்துவத்திற்காக துவங்கப்பட்ட இரண்டாவது மருத்துவமனை எது?

A) வில்லிவாக்கம் கண் மருத்துவமனை **B) எழும்பூர் கண் மருத்துவமனை**

C) சைதாபேட்டை கண் மருத்துவமனை D) கிண்டி கண் மருத்துவமனை

**84)** தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்த ஆண்டு?

**A) 2002** B) 2003 C) 1997 D) 1998

**85)** 2019 -20 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உயர் கல்வி சேர்க்கை விகிதம் என்ன?

A) 49% B) 51.8% C) 51.0% **D) 51.4%**

**86)** காங்கிரஸ் கட்சியின் கடைசி தமிழக முதலமைச்சர் யார்?

A) காமராஜர் B) சத்தியமூர்த்தி

**C) பக்தவச்சலம்** D) சி.எஸ். சுந்தர்மூர்த்தி

**87)** கி.பி. 1930 இல் எங்கு நடந்த சுயமரியாதை மாநாட்டில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?

A) செங்கல்பட்டு B) திருச்சி C) வந்தவாசி **D) நன்னிலம்**

**88)** 1968, ஜனவரி 23இல் அறிஞர் அண்ணா தமிழகத்தில் அறிமுகம் செய்த திட்டம் என்ன?

A) மும்மொழிக் கொள்கை திட்டம்

B) ஒரு மொழிக் கொள்கைத் திட்டம்

**C) இருமொழிக் கொள்கைத் திட்டம்**

D) தாய்மொழிக் கொள்கைத் திட்டம்

ETW ACADEMY

**89)** அண்ணா அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணப் பாதுகாப்புச் சட்டம் என்று முதல் நடைமுறைக்கு வந்தது?

A) 1968, ஜனவரி 6 B) 1968 ஜனவரி 14 C) 1968 ஜனவரி 26 **D) 1968 ஜனவரி 20**

**90)** கலைஞர் மு. கருணாநிதி, தான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய யார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்?

**A) பி.வி. ராஜமன்னார்** B) சர்க்காரியா C) நீதிபதி ராஜன் D) நீதிபதி மோகன்

**91)** அகர முதலித் திட்ட இயக்ககம் நிறுவப்பட்டது எப்போது?

A) 1975 **B) 1974** C) 1973 D) 1972

**92)** தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்களை பெறும் மாநிலத்தில் தமிழ்நாடு வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம் **B) இரண்டாமிடம்** C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**93)** தமிழக அரசின் அனைத்து மின்னாளுமை முயற்சிகளையும் தலைமையேற்று செயல்படுத்திட, மின்னாளுமை ஆணையரகம் உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 2000 B) 2002 C) 2004 **D) 2006**

**94)** "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மின் ஆளுமைக்கான உயரிய விருது" யாருக்கு வழங்கப்படுகிறது?

**A) மாணவர்களுக்கு** B) இளைஞர்களுக்கு

C) மின்னாளுமை ஆர்வலர்களுக்கு D) இவரனைவருக்கும்

**95)** பல்வேறு நிறுவனங்களால் இயங்கும் பொது சேவை மையம், எவ்வமைப்பால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன?

**A) TNeGA** B) NeGA C) SeGA D) A & B

**96)** தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்திற்கு (DOTE) இணையவழிக் கலந்தாய்விற்கான மென்பொருளைப் பயன்படுத்த தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்கும் அமைப்பு எது?

A) ELCOT **B) TNeGA** C) CEET D) TACTV

**97)** தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் அடையாளம் காணப்பட்ட தீர்வுகளைத் தயாரிப்பதில் உறுதியளிக்கும் துவக்கநிலை நிறுவனங்களுக்கு உதவும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அமைப்பு எது?

A) இந்திய மேலாண்மை நிறுவனம், திருச்சி B) இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை

C) வர்ஜீனியா தொழில்நுட்பம் பல்கலைக்கழகம் **D) பாண்டாக் - யு.கே இந்தியா புதுமை நிதியம்**

**98)** தமிழ்நாடு மின்னணு நிறுவனம்(ELCOT) எப்பொது உருவாக்கப்பட்டது?

A) 20.08.2006 B) 23.01.2007 **C) 21.03.1977** D) 20.08.1998

**99)** தமிழகத்தில் வழங்கப்படும் 69% இட ஒதுக்கீட்டு சட்டம், அரசியலமைப்பின் எச்சட்டத்திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் IX ஆவது அட்டவணையில் இணைக்கப்பெற்றது?

A) 72 வது **B) 76 வது** C) 84 வது D) 92 வது

ETW ACADEMY

**100)** இந்திய அரசு அமைத்த முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் எது?

A) மண்டல் ஆணையம்
**B) காகா கலேல்கர் ஆணையம்**
C) சிபு ராய்க்கர் ஆணையம்
D) மோமி பல்லேக்கா ஆணையம்

**101)** எதிர்பார்க்கப்படும் ஆயுளுக்கான குறியீட்டில், உச்ச நிலையான 100 ஐ 1973 ஆம் ஆண்டே அடைந்துவிட்ட நாடு எது?

A) பிரிட்டன்
B) சுவிட்சர்லாந்து
C) ஆஸ்திரேலியா
**D) ஸ்வீடன்**

**102)** நிதி ஆயோக் அறிக்கையின் படி 2016ஆம் ஆண்டில், தமிழகத்தில் மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதம் (MMR) என்ன? (1 லட்சம் மகப்பேறில்)

A) 55
**B) 79**
C) 54
D) 78

**103)** மனித மேம்பாட்டுக் குறியீட்டு அட்டவணையில் முதல் இடத்தில் உள்ள மாவட்டம் எது?

A) விருதுநகர்
**B) கன்னியகுமரி**
C) சென்னை
D) காஞ்சிபுரம்

**104)** தமிழ்நாட்டில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி மானவர் சேர்க்கைக்கான நுழைவுத்தேர்வை ரத்து செய்ய கலைஞர் யாருடையத் எக்குழுவை அமைத்தார்?

A) அனந்தா சார்லு குழு
**B) அனந்த கிருஷ்ணன் குழு**
C) சீனிவாச முதலியார் குழு
D) ரெங்கய்யா குழு

**105)** தேசிய அளவில் காற்றாலை உற்பத்தியில் தமிழ்நாடு எவ்விடத்தில் உள்ளது?

**A) முதலாவது**
B) இரண்டாவது
C) மூன்றாவது
D) எட்டாவது

**106)** தேசிய மின்னாளுமைத் திட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975–இன்கீழ் பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்ட அமைப்பு எது?

**A) தமிழ்நாடு மின்னாளுமை முகமை**
B) தமிழ்நாடு தகவல் தொழில்நுப இயக்குநரகம்
C) தமிழ்நாடு மின்னாளுமை நிதியம்
D) தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப ஆணையரகம்

**107)** அடங்கலின் வலைப் பதிப்பை உருவாக்கியுள்ளது எது?

A) ELCOT
**B) TNeGA**
C) CEET
D) TACTV

**108)** 2019இல் நிதி ஆயோக் வெளியிட்ட சுகாதார அறிக்கையில் தமிழ்நாடு எவ்விடத்தில் உள்ளது?

A) முதலாவது
B) மூன்றாவது
**C) ஒன்பதாவது**
D) பதிமூன்றாவது

**109)** சமச்சீர் கல்விமுறையானது தமிழ்நாட்டில் எக்கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?

A) 2006 -07
B) 2009 - 10
**C) 2010 - 11**
D) 2011 - 12

**110)** விடுதலைக்குப் பிறகு தமிழகத்தில் தொடங்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் எது?

A) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
**B) மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்**
C) சேலம் பெரியார் பல்கலைக்கழகம்
D) திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம்

ETW ACADEMY

**111)** நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாடு வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம் **B) இரண்டாமிடம்** C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**112)** பேரிடர் அவரசர கால தொலைபேசி எண் என்ன?

A) 1088 B) 1066 **C) 1077** D) 1099

**113)** பெண்குழந்தைகள் பாதுகாப்பிற்கான கட்டணமில்லா தொலைபேசி எண் எது?

A) 1094 B) 191 C) 181 **D) 1098**

**114)** "பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்" திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்கான 2019இன் தேசிய விருது எம்மாநிலத்திற்கு வழங்கப்பட்டது?

**A) தமிழ்நாடு** B) கேரளா C) மேற்கு வங்கம் D) ஹரியானா

**115)** தமிழக அரசால், பார்வை இழப்பை தடுப்பதற்கான சங்கம் துவங்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1994 **B) 1986** C) 1981 D) 1999

**116)** ஒவ்வொரு ஆண்டும் உலக சுகாதார நாளாக கடைபிடிக்கப்படும் நாள் எது?

A) மார்ச் 7 **B) ஏப்ரல் 7** C) மே 7 D) ஜூன் 7

**117)** பின்வருவனவற்றுள், சமூக நீதியை ஏற்படுத்துவதில் முக்கியமான கருவியாக இருப்பது எது?

A) சுய சாதி திருமணங்கள் B) குலக் கல்வி **C) இட ஒதுக்கீடு** D) தீண்டாமை

**118)** பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27% இட ஒதுக்கீடை எதிர்த்து இடஒதுக்கீட்டு முறையானது, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும், அரசமைப்புச் சட்ட விதிகளை மீறும் வகையில் அமைந்துள்ளது என உச்சநீதிமன்றத்தில் வழக்குதொடுத்தவர் யார்?

A) அடல் பிகாரி வாஜ்பாய் B) எல். கே. அத்வானி **C) இந்திரா சகானி** D) தீபக் கோகாய்

**119)** தமிழகத்தில், முதல் இ - சேவை மையம் எங்கு தொடங்கப்பட்டது?

**A) சென்னை** B) கோவை C) திருச்சி D) திருவாரூர்

**120)** மின் ஆளுமையின் சிறப்பியல்பு எது?

A) இது நவீனத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைவதில்லை

B) மின் ஆளுகை தனித்திறன் பெற்ற பணியாளர்களை கொண்டிருப்பதில்லை

**C) இது மக்கள் சேவையை எளிமையாகவும், வெளிப்படையாகவும் மாற்றக்கூடியது**

D) தனியார் துறையினர், தொழில்நுட்ப வல்லுநர்கள் சிறிய அளவில் மின்னணு ஆளுகையில் பங்கெடுப்பர்

**121)** 1867இல் சீவகசிந்தாமணி, 1898இல் மணிமேகலை ஆகிய இரண்டும் முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட பின்னணியில் மிகமுக்கியமான ஆளுமையாக இருந்தவர் யார்?

**A) அயோத்திதாச பண்டிதர்** B) ஆறுமுக நாவலர்

C) வள்ளலார் D) வைகுண்ட சுவாமிகள்

**122)** அண்ணா பல்கலைக்கழகம், இந்திய அளவில் பொறியியல் துறைக்காக ஆரம்பிக்கப்பட்ட ______ வது பல்கலைக்கழகமாகும்.

**A) முதலாவது** B) இரண்டாவது C) மூன்றாவது D) நான்காவது

ETW ACADEMY

**123)** முல்லைப்பெரியாறு அணையின் உயரம் மற்றும் நீளம் முறையே என்ன?

A) 155 அடி & 1,400 அடி
B) 165 அடி & 1,300 அடி
**C) 175 அடி & 1,200 அடி**
D) 185 அடி & 1,100 அடி

**124)** தமிழ்நாட்டின் நீர்வளங்களை மேம்படுத்துவதற்காக புதிதாக உருவாக்கப்பட்ட துறையான நீர்வளத்துறை, முன்பிருந்த எந்த துறையில் இருந்து பிரிக்கப்பட்டது ஆகும்?

A) சமூக நலத்துறை
B) தொழிலாளர் நலத்துறை
**C) பொதுப்பணித்துறை**
D) சுற்றுச்சூழல் துறை

**125)** தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 63.70% பங்களிப்புடன் முதலிடத்தில் உள்ள துறை?

A) வேளாண் துறை
B) தொழிற் துறை
**C) சேவைத் துறை**
D) இவையனைத்தும்

**126)** தந்தை பெரியாரால் திராவிடர் கழகம் தொற்றுவிக்கப்பட்ட ஆண்டு?

A) 1938
B) 1947
**C) 1944**
D) 1950

**127)** 2014 இல், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திலிருந்து மீன்வளக் கல்லூரிகளை பிரித்து, செல்வி ஜெயலலிதா அவர்களால் மீன்வளப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட இடம் எது?

**A) நாகப்பட்டினம்**
B) தூத்துக்குடி
C) கடலூர்
D) சென்னை

**128)** மு.கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்து ஆராய்ந்திட யார் தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது.

A) விஸ்வநாதன்
**B) சட்டநாதன்**
C) சுவாமிநாதன்
D) அரங்கநாதன்

**129)** தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ் சொற்களடங்கிய அகராதி ஒன்றை தொகுத்தவர் யார்?

**A) நீலாம்பிகை அம்மையார்**
B) கமலாம்பிகை அம்மையார்
C) தருமாம்பாள் அம்மையார்
D) இவரனைவரும்

**130)** தமிழ்நாடு உருவான காலத்தில், தமிழகத்தில் எத்தனை மாவட்டங்கள் இருந்தன?

A) 18
**B) 13**
C) 21
D) 24

**131)** உற்பத்திசெய்யப்பட்ட தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதியில் 37 % பங்களிப்புடன் முதன்மை மாவட்டமாக விளங்குவது எது?

A) இராணிப்பேட்டை
B) திருவண்ணாமலை
**C) வேலூர்**
D) திருவள்ளுர்

**132)** தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை தற்போது எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது?

**A) சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறை**
B) சமூகநலம் மற்றும் குழந்தைகள் நலத்துறை
C) சமூக நலம் மற்றும் மகளிர் நலத்துறை
D) சமூக நலம் மற்றும் வாழ்க்கை உரிமை நலத்துறை

ETW ACADEMY

**133)** தமிழ்நாட்டின் தலைமை செயலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை என தனி நிர்வாக துறை உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

**A) 2010** B) 2008 C) 2007 D) 2014

**134)** இந்திய அளவில், தொழிற்துறையில் உள்ள வேலைவாய்ப்பின் அடிப்படியில் தமிழ்நாடு எத்தனை சதம் பங்களிப்பினை அளிக்கிறது?

A) 11 % B) 18 % C) 27 % **D) 16 %**

**135)** திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கடைபிடித்து அதிக உற்பத்தி செய்ததால், வேளாண்துறையின் சிறப்பு விருது பெற்ற வில்சன் என்பவர் எம்மாவட்டத்தை சேர்ந்தவர்?

A) திருச்சி B) தஞ்சை **C) புதுக்கோட்டை** D) நாகப்பட்டினம்

**136)** சுற்றுலாத்துறையில் தமிழகத்தின் நிலை என்ன?

**A) முதலிடம்** B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**137)** ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படும் நகரம் எது?

**A) சென்னை** B) பெங்களூரு C) கோவை D) ஹைதராபாத்

**138)** தமிழ்நாடு திற்ந்தநிலைப் பல்கலைக்கழகம் சென்னையில் தொடங்கப்பட்ட ஆண்டு?

**A) 2002** B) 2006 C) 2004 D) 2003

**139)** 2018 19 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் என்ன?

**A) 49%** B) 50% C) 48% D) 45%

**140)** சென்னை மாநிலம் என்றழைக்கப்பட்ட பெயர் "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட நாள் எது?

A) 1969, ஜனவரி 6 **B) 1969 ஜனவரி 14** C) 1969 ஜனவரி 26 D) 1969 ஜனவரி 30

**141)** இந்திய அளவில், மின் உற்பத்தியில் தமிழகம் வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம் **B) இரண்டாமிடம்** C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**142)** 1835 - ம் ஆண்டு இந்தியாவில் எத்தனையாவது மருத்துவக் கல்லூரியாக சென்னை மருத்துவக் கல்லூரி துவங்கப்பட்டது?

A) முதலாவது மருத்துவக்கல்லூரியாக **B) இரண்டாவது மருத்துவக்கல்லூரியாக**
C) மூன்றாவது மருத்துவக்கல்லூரியாக D) நான்காவது மருத்துவக்கல்லூரியாக

**143)** மதுரை பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகமாக பெயர்மாற்றம் செய்யப்பட்டது எப்போது?

A) 1970 **B) 1976** C) 1980 D) 1986

**144)** திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் கிடைக்கும் தாது எது?

A) பாக்சைட் **B) ஜிப்சம்** C) மேக்னசைட் D) இரும்புத்தாது

**145)** திடக்கழிவு மேலாண்மையில் தமிழ்நாட்டின் இடம் என்ன?

**A) முதலிடம்** B) இரண்டாமிடம் C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

ETW ACADEMY

**146)**நிதி ஆயோக் வெளியிட்ட நீடித்த வளர்ச்சி இலக்கு 2020 21 அறிக்கையின்படி, தமிழ்நாடு பெற்ற புள்ளிகள் எவ்வளவு?

**A) 74** B) 76 C) 81 D) 72

**147)**சட்டநாதன் ஆணயத்தின் பரிந்துரையின்படி 1971 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு வரம்பு எத்தனை சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டது?

A) 17 B) 15 **C) 18** D) 22

**148)**தமிழகத்தில் சமச்சீர் கல்வி சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் எது?

A) ஜனவரி 9, 2010 **B) ஜனவரி 11, 2010** C) ஜனவரி 21, 2010 D) ஜனவரி 30, 2010

**149)**தமிழ்நாடு அரசு, 24 மணி நேரமும் பெண்களின் நலனுக்காக செயல்படுத்தி வரும் கட்டணமில்லா மகளிர் உதவி எண் என்ன?

**A) 181** B) 131 C) 151 D) 191

**150)**தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கக்கூடும் என ஐயமுற்று, தன்னாட்சி இயக்கத்தை _____என நீதிக்கட்சி எதிர்த்தது.

A) பிராமணரல்லாதோர் இயக்கம் **B) பிராமணர்களின் இயக்கம்**

C) திலகர் இயக்கம் D) அன்னிபெசண்ட் இயக்கம்

**151)**பனகல் அரசரால் நிறுவப்பட்ட பணியாளர் தெர்வுக்குழு, பொதுப் பணியாளர் தேர்வாணையமாக மாற்றப்பட்ட ஆண்டு என்ன?

A) 1926 B) 1928 C) 1927 **D) 1929**

**152)**திட்டங்கள் மற்றும் ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தவறான இணை எது?

A) பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் - 1970

**B) உலகத் தமிழாராட்சி நிறுவனம்** – ~~1971~~ ==> **1970**

C) கண்ணொளி வழங்கும் திட்டம் - 1971

D) இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் - 1973

**153)**நீதிக்கட்சியால், தேவதாசி முறை ஒழிக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1927 B) 1928 **C) 1929** D) 1930

**154)**இந்திய அளவில், மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழகம் எவ்விடம் வகிக்கிறது?

**A) மூன்றாவது** B) ஒன்பதாவது C) எட்டாவது D) ஆறாவது

**155)**மாநில சுயாட்சி கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள் எது?

A) 1972, ஜனவரி 20 B) 1971, பிப்ரவரி 20 C) 1973, மார்ச் 20 **D) 1974, ஏப்ரல் 20**

**156)**நிதி ஆயோக் அறிக்கையின் படி 2016ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் (IMR) என்ன?

**A) 17** B) 24 C) 34 D) 37

ETW ACADEMY

**157)**2018-19 அறிக்கையின்படி, பள்ளிக்கல்வி மாணவர் சேர்க்கையில், இந்திய அளவில் தமிழகத்தின் இடம் என்ன?

A) முதலாமிடம் **B) இரண்டாமிடம்** C) மூன்றாமிடம் D) நான்காமிடம்

**158)**நடேசனார், பொ.ஆ. 1916 ஜூன் மாதத்தில், பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக "திராவிடர் சங்க தங்கும் விடுதியை" எங்கு நிறுவினார்?

A) அடையாறு B) மைலாப்பூர் **C) திருவெல்லிக்கேணி** D) நுங்கம்பாக்கம்

**159)**தமிழக அரசால், மருத்துவக் கல்வி இயக்ககம் உருவாக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1923 **B) 1966** C) 1954 D) 1956

**160)**இந்தியாவிலேயே அதிக அளவிலான அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ள மாநிலம் எது?

**A) தமிழ்நாடு** B) கேரளம் C) குஜராத் D) மேற்குவங்கம்

**161)**ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு, ______ சட்டத்தின் படி கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய தொடக்கம் ஏற்பட்டது.

A) 1835 பட்டயச் சட்டம் B) 1818 பட்டயச் சட்டம்

**C) 1813 பட்டயச் சட்டம்** D) 1854 பட்டயச் சட்டம்

**162)**சமச்சீர் கல்விமுறையைக் கொண்டுவர, தமிழக அரசு யார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது?

A) சந்தன பாண்டியன் B) செந்தில்நாதன்

**C) முத்துக்குமரன்** D) பழ. ராஜமாணிக்கம்

**163)**பின்வருவனவற்றுள் நூலகத்தைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?

A) திருவாடுதுறைக் கல்வெட்டு B) திருவாலங்காடு கல்வெட்டு

C) திருபுவனம் கல்வெட்டு **D) திருவிடைக்காளை கல்வெட்டு**

**164)**2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் கல்வியறிவு விகிதம் எவ்வளவு?

**A) 80.09 %** B) 73.45 % C) 86.77 % D) 73.44 %

**165)**பின்வருவனவற்றுள் செயற்கைத் துறைமுகம் எது?

**A) சென்னை** B) எண்ணூர் C) தூத்துக்குடி D) நாகப்பட்டினம்

**166)**கலைஞர் மு. கருணாநிதி, தான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய ஒரு குழுவை அமைத்த நாள் எது?

A) 1969, அக்டோபர் 30 B) 1969, ஜனவரி 30 **C) 1969, அக்டோபர் 2** D) 1969, ஜனவரி 2

**167)**தொழிற்சாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் (37000 அலகுகள்), இந்திய அளவில் தமிழகம் வகிக்கும் இடம் என்ன?

**A) முதலாவது** B) இரண்டாவது

C) மூன்றாவது D) ஐந்தாவது

ETW ACADEMY

**168)** அண்ணா கி.பி. 1969இல் மரணமடைந்ததும் தமிழகத்தின் தற்காலிக முதல்வராகப் பணியாற்றியவர் யார்?

A) பொன்னையன்

**B) நாவலர் நெடுஞ்செழியன்**

C) க. அன்பழகன்

D) கலைஞர். மு. கருணாநிதி

**169)** தான் முதலமைச்சராகப் பதவியேற்ற ஒரு மாத காலத்திலேயே, பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்படும் என்று 1937, ஆகஸ்ட் 11 அன்று அறிவித்தவர் யார்?

**A) ராஜகோபாலாச்சாரி**

B) பொப்பிலி அரசர்

C) பி. முனிசாமி நாயுடு

D) பக்தவச்சலம்

**170)** தகவல் அறியும் உரிமைச்சட்டம் எந்நாளில் இருந்து தமிழகத்தில் நடைமுறைக்கு வந்தது?

**A) அக்டோபர் 12, 2005**

B) அக்டோபர் 2, 2015

C) அக்டோபர் 12, 2015

D) அக்டோபர் 2, 2005

**171)** தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் நோக்கங்களில் தவறாகக் கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) தமிழக அரசின் முதன்மைத் தொழில்நுட்ப மற்றும் புதுமையான அணுகுமுறைகளை உருவாக்கும் அமைப்பாக விளங்குதல்

**B) தமிழ்நாட்டின் ஒவ்வொரு அரசு ~~மற்றும் தனியார்~~ நிறுவனத்தினையும் காகிதப் பயன்பாடற்ற, இடையூறுகளற்ற, வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் நேரடித் தொடர்புகளற்ற நிறுவனங்களாக மாற்றுதல்**

C) அரசின் சேவைகளை விரைவாக வழங்குவதன் மூலம் அச்சேவைகளைப் பெறும் பயனாளிகளுக்கு அதன் எளிமைத் தன்மையை உணரச்செய்தல்

D) ஏதுமில்லை

**172)** மாநில அரசுகளின் மின்னாளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசின் தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் (NeGP) கீழ், திறன் மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது எது?

**A) மாநில மின் குறிக்கோள் குழு (SeMT)**

B) மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (DeGS)

C) பொது சேவைகள் மையங்கள் (CSC)

D) வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்புமையம் (CEET)

**173)** தமிழகத்தில் வகுப்புவாரி ஆணை பின்பற்றப்படுவதால், மருத்துவக் கல்லூரியில் தனக்கு இடம் கிடைக்கவில்லை எனக்கூறி 1951ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்தவர் யார்?

A) பழனிவேல் ராஜன்

B) துரை செந்தில் ராஜன்

**C) செண்பகம் துரை ராஜன்**

D) வாடாமல்லி செந்தில் ராஜன்

ETW ACADEMY

174) தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ஆனது தற்போது எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது?

**A) மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை**
B) மருத்துவம் மற்றும் சுகாதார நலத்துறை
C) மருத்துவ நலத்துறை
D) சுகாதார நலத்துறை

175) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் எந்த ஆண்டு அமைக்கப்பட்டது மற்றும் எந்த ஆண்டு மறு சீரமைக்கப்பட்டது?

**A) 1993 மற்றும் 2017**
B) 1997 மற்றும் 2007
C) 1995 மற்றும் 2003
D) 2000 மற்றும் 2018

176) சென்னை மாவட்ட மின்னாளுமைச் சங்கம், யாருடைய தலைமையில் இயங்கி வருகிறது?

A) மாவட்ட ஆட்சியர்
B) மேயர்
**C) மாநகராட்சி ஆணையர்**
D) மாநில தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

177) உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழியலில் இடுபட்டுள்ள மற்றையோருக்கும் இணையம்வழி, தமிழ்மொழி, தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாட்டு வளங்களை வழங்குவதையும், வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதையும் நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்ட அமைப்பு எது?

A) தமிழ்வழி கல்விக்கழகம்
B) தமிழ்வழி இணையக் கழகம்
**C) தமிழ் இணையக் கல்விக்கழகம்**
D) தமிழ் இணையக் கழகம்

178) F.W. எல்லிஸ் புனித ஜார்ஜ் கோட்டையில் எவ்வாண்டு கல்லூரியை நிறுவினார்?

**A) 1816**
B) 1818
C) 1820
D) 1822

179) பொது சேவை மையத்தின் மூலம் இலாபகரமான வருமானம் ஈட்டும் பொதுத் துறை நிறுவனங்களில் சேராதது எது?

A) தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் (PACCS)
B) கிராம வறுமை குறைப்புக் குழு (VPRC)
C) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV)
**D) ஆவின்**

180) மாநிலத்தில் தொழில்துறை திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் பொருட்டு முதலீட்டாளர் சேவை இனையம் ஒன்றினை உருவாக்கியதற்காக TNeGA பெற்ற விருது என்ன?

**A) இ - பிஸ் விருது**
B) வெப் ரத்னா விருது
C) எஸ் - கியூப் விருது
D) ஏதுமில்லை

181) செங்கல்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்து ஒரு அறிக்கை தாக்கல் செய்த அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் யார்?

**A) திரிமென்கீரே**
B) வால்ட்மோர்
C) ரிச்செட்ஹூக்
D) சைமன் டஃபில்

182) தமிழக அரசின் முன் முயற்சியின் படி, ELCOT எத்தனை இடங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது?

A) 4
B) 6
**C) 8**
D) 12

ETW ACADEMY

**183)** இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் 1921 இல் தனது டாக்டர் பட்டத்தை எந்த மருத்துவக் கல்லூரியில் பெற்றார்?

A) மும்பை மருத்துவக் கல்லூரியில்
B) கல்கத்தா மருத்துவக் கல்லூரியில்
**C) சென்னை மருத்துவக் கல்லூரியில்**
D) பனாரஸ் மருத்துவக் கல்லூரியில்

**184)** யாருடைய காலத்தில் கல்வி நிறுவனங்கள் கடிகை எனவும் அழைக்கப்பட்டன?

1. சேரர் 2. பல்லவர் 3. பாண்டியர் 4. சோழர்

A) 1 & 2
B) 2 & 4
C) 3 & 4
**D) 2 & 3**

**185)** மாநில உள்நாட்டு மீன் உற்பத்தியில் 10 சதவீத உற்பத்தியுடன் முன்னிலையில் உள்ள மாவட்டம் எது?

A) திருப்பூர்
B) கன்னியாகுமரி
**C) வேலூர்**
D) திருவண்ணாமலை

**186)** பின்வருவனவற்றுள் விவசாயத்துடன் தொடர்புடைய தமிழக அரசின் துறை எது?

A) விவசாயம் மற்றும் விவசாயிகள் துறை
**B) விவசாயம் மற்றும் உழவர் நலத்துறை**
C) உழவர் நலத்துறை
D) விவசாய நலத்துறை

**187)** கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் ஏழைப் பெண்கள் ஆதரவற்ற பெண்கள் விதவைகள் ஆகியோருக்கு தங்குமிடம் உணவு சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி போன்றவற்றை அளிக்க, எத்தனை மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்கள செயல்பட்டு வருகின்றன?

A) 6
**B) 8**
C) 10
D) 12

- செங்கல்பட்டு சேலம் கடலூர் தஞ்சாவூர் திருநெல்வேலி சிவகங்கை கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர்

**188)** 2019 20 ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள பெண்களின் மொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் என்ன?

A) 49%
B) 50%
**C) 51%**
D) 52%

**189)** இந்திய அளவில், மூலதன முதலீட்டிலும் மொத்த தொழில் துறை உற்பத்தியிலும் தமிழகம் எவ்விடம் வகிக்கிறது?

**A) மூன்றாவது**
B) ஒன்பதாவது
C) எட்டாவது
D) ஆறாவது

- தமிழ்நாட்டின் மூலதன முதலீடு - 2.92 இலட்சம் கோடி
- தொழிற்துறை உற்பத்தி - 6.19 இலட்சம் கோடி

**190)** 2019இல் நீர்நிலைகள் புனரமைப்பு, புதிதாக உருவாக்குதல் பணிகளுக்காக மூன்றாவது பரிசு பெற்ற மாவட்டம் எது?

A) திருநெல்வேலி
B) தஞ்சாவூர்
**C) சிவகங்கை**
D) திருவாரூர்

**191)** ஐரோப்பிய மொழிகள் தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி _____ மொழியாகும்.

A) பிராகிருதம்
B) சமஸ்கிருதம்
C) பாலி
**D) தமிழ்**

ETW ACADEMY

**192)** தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் தமிழக அரசானது 2008 இல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தை எங்கு நிறுவியுள்ளது?

**A) சென்னை** B) கோவை C) நாமக்கல் D) ஈரோடு

**193)** தமிழகத்தில் அதிகளவில் சோளம் பயிரிடப்படும் பகுதிகள் எவை?

**A) கோயம்புத்தூர் பீடபூமியிலும், கம்பம் பள்ளத்தாக்கிலும்**

B) இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர் & சேலம்

C) கோயம்புத்தூர், தர்மபுரி, வேலூர் மற்றும் கடலூர்

D) இராமநாதபுரம், வேலூர், பெரம்பலூர் & தர்மபுரி

**194)** 2017 தமிழ்நாடு புள்ளியியல் கையேட்டின்படி, தமிழகத்தில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை என்ன?

**A) 41,127** B) 81 C) 17 D) 156

**195)** நிதி ஆயோக் வெளியிட்ட நீடித்த வளர்ச்சி இலக்கு 2020 - 21 அறிக்கையின்படி, அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து வளரும் மாநிலங்களில் தமிழ்நாடு வகிக்கும் இடம் என்ன?

A) முதலிடம் **B) இரண்டாமிடம்** C) மூன்றாமிடம் D) நான்காம் இடம்

**196)** பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு என்ன?

A) 2006 **B) 2007** C) 2008 D) 2010

- பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல விதிகள் இயற்றப்பட்ட ஆண்டு 2009

**197)** சுதந்திரத்திற்குப் பிறகு யார் தலைமையிலான அரசு, சென்னையில் மீண்டும் இந்தியைக் கட்டாயமாக்கியது?

A) பக்தவச்சலம் B) இராஜகோபாலாச்சாரி

**C) ஓ. பி. ராமசாமி ரெட்டியார்** D) காமராஜர்

**198)** எந்தெந்த ஆண்டுகளில் நீதிக்கட்சியால் கொண்டுவரப்பட்ட அரசாணைகளால், உள்ளட்சித் துறைகளிலும், கல்விநிலையங்களிலும் வேலைவாய்ப்பில் பிராமனர் அல்லாதோருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது?

A) 1920 & 1921 **B) 1921 & 1922** C) 1926 & 1927 D) 1925 & 1927

**199)** தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் தொடங்கப்பட்ட செய்தித் தாள் அல்லாதது எது?

**A) விடுதலை** B) ஜஸ்டிஸ்

C) திராவிடன் D) ஆந்திர பிரகாசிகா

**200)** தமிழகத்தின் இலக்க (டிஜிட்டல்) ஆவணகாப்பகம் என்பது எவ்வமைப்பின் ஒரு சீரிய முயற்சியாகும்?

A) மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**B) தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை**

C) திறன் மேம்பாட்டுத் திட்டம்

D) பொது சேவை மையம்

***

© ETW Academy